www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

T

தூத்துக்குடி மாவட்டம்

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2024

## ஆறாம் வகுப்பு

நேரம்: 1.00 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 30

அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5×1=5

1) தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் ________ சுருங்கிவிட்டது.
அ) மேதினி ஆ) நிலா இ) வானம் ஈ) காற்று

2) 'தொன்மை' என்னும் சொல்லின் பொருள் ________
அ) புதுமை ஆ) பழமை இ) பெருமை ஈ) சீர்மை

3) 'சித்தம்' என்பதன் பொருள் ________
அ) உள்ளம் ஆ) மணம் இ) குணம் ஈ) வனம்

4) கதிரவனின் மற்றொரு பெயர் ________
அ) புதன் ஆ) ஞாயிறு இ) சந்திரன் ஈ) செவ்வாய்

5) நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவர்க்கு ________ ஆக இருக்கும்
அ) மகிழ்ச்சி ஆ) கோபம் இ) வருத்தம் ஈ) அசதி

ஆ) எவையேனும் மூன்று வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடையளிக்க. 3×2=6

6) தமிழ்மொழியின் செயல்களாகக் கவிஞர் கூறுவன யாவை?

7) தமிழ் எழுத்துகளுக்குரிய மாத்திரை அளவுகளைக் குறிப்பிடுக?

8) காணிநிலம் பாடலில் பாரதியார் வேண்டுவன யாவை?

9) வலசையின் போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?

10) பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை?

இ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஓரிரு தொடர்களில் விடையளிக்க. 2×3=6

11) தமிழ்மொழியின் சிறப்பைக் குறித்து ஐந்து வரிகளில் எழுதுக?

12) இயற்கையைப் போற்றும் வழக்கம் ஏற்படக் காரணமாக எவற்றைக் கருதுகிறீர்கள்?

13) சிட்டுக்குருவியின் வாழ்க்கைப் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக?

ஈ) பின்வரும் மனப்பாடப் பகுதியை அடிபிறழாமல் எழுதுக:- 1×3=3

14) 'மாமழை'....... எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை எழுதுக.

உ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி:- 5×1=5

15) கலைச்சொல் தருக:- i) Continent ii) Whatsapp

16) முதல் எழுத்து இடம்பெறாத சொற்கள் இரண்டு எழுதுக

17) கீழ்க்காணும் சொற்களில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்கள் உருவாக்குக:- பரிபாடல்

18) வரிசை மாறியுள்ள சொற்களைச் சரியான வரிசையில் அமைத்து எழுதுக:-
மனிதர் இந்தியாவின் டாக்டர் சலீம் அலி பறவை

19) உங்கள் பெயரை எழுதி மாத்திரை அளவைக் கண்டுபிடித்து எழுதுக

ஊ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளிக்க:- 1×5=5

20) கட்டுரை எழுதுக:- இயற்கையைக் காப்போம்

21) உறவினரின் திருமணத்திற்குச் செல்வதற்காக இரண்டு நாள் விடுப்பு வேண்டி விடுப்பு விண்ணப்பம் எழுதுக.

********

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com